# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 60/பேரூ/2023**
**நாள் : 13.04.2023**

திரு. T.P. பாலசுப்பரமணியன்,
சிறுகமணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், சிறுகமணி அஞ்சல், திருவள்ளுவர் நகர், என்ற முகவரியைச் சேர்ந்த திரு. T.P. பாலசுப்பரமணியன் என்பவரது 11.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.01.2023 அன்று பெறப்பட்டு 60/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், சிறுகமணி அஞ்சல், திருவள்ளுவர் நகர், என்ற முகவரியில் வசிக்கும் திரு. T.P. பாலசுப்பரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், சிறுகமணி பேரூராட்சிக்குட்பட்ட 3-வது வார்டில் அமைந்துள்ள கிராமத்தில் உள்ள பொது சந்து மற்றும் அதன் பாதைகளுக்கும், மாரியம்மன் கோவில் முன்பாகவும் மற்றும் அதன் பின்பாகவும் இருக்கின்ற இடங்களில் பேவர் பிளாக் சிமெண்ட் சாலை அமைப்பதற்கும் மற்றும் இதர வார்டுகளில் சிறுகமணி பேரூராட்சியின் மூலம் தமிழ்நாடு அரசு Tender Notice:30154104–ல் அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு சாலை அமைக்க Paver block road with storm water drain என்ற திட்டத்தின்படி சுமார் ரூபாய் 94,50,000/- மதிப்பீடு

செய்து ஒப்பந்த விபரம் இணையதளத்தில் வெளியிட்டுள்ளனர். ஆனால் மேற்படி ஒப்பந்தபுள்ளியின் விபரப்படி அரசிடம் முறையாக அனுமதி பெறாமலும், சட்டத்திற்கு முரணாகவும், முறைகேடாகவும் கிராம கணக்கில் ஒத்தையடிப் பாதை என்ற இடத்திலும், பொதுமக்கள் குடியிருப்பு இல்லாத இடத்திலும் யாருக்கும் பயனற்ற நிலையில் சுமார் 10 அடிக்கு 200 அடி அளவில் அதிகார துஷ்பிரயோகம் செய்து 3-வது வார்டு கவுன்சிலர், சிறுகமணி பேரூராட்சியின் நிர்வாக செயல் அலுவலர் மற்றும் நிர்வாக பொறியாளர் சாலை அமைத்துள்ளனர்.

மேற்படி அரசின் நிதியை முறைகேடாகவும், வீணாகவும் செலவிட்டதை அறிந்தவுடன் கடந்த 12.10.2022–ஆம் தேதியன்று சிறுகமணி பேரூராட்சியின் பொது தகவல் அலுவலரிடம், தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி மனு அளித்தேன். மேற்படி மனுவிற்கு 10.11.2022–ஆம் நாளிடப்பட்ட கடிதத்தில் உண்மைக்கு மாறாக எனக்கு பதில் அளித்துள்ளனர். இதனால் நான் பெருத்த அதிர்ச்சியும், மன வேதனையும் அடைந்துள்ளேன். இணையத்தின் வாயிலாக ஒப்பந்தபுள்ளியின் மதிப்பீட்டின் ரூபாய் 94,50,000/- என்று உள்ள போது, அதற்கு மாறாக மேற்படி திட்டத்தின் மதிப்பு ரூபாய் 133 இலட்சத்திற்கு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், மேற்படி முறைகேட்டிற்கு தக்க விசாரணை செய்து ஒப்பந்தம் செய்தவரின் மீதும், தவறாக தகவல் அளித்த செயல் அலுவலர் மீதும் கடந்த 14.11.2022–ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சியரிடம் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டி மனு அளித்துள்ளேன். மேற்படி மனுவிற்கு மாவட்ட ஆட்சியரும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது பற்றி இதுநாள்வரை எனக்கு எந்த தகவலும் தெரியவில்லை. இதனால் நான் பெருத்த மன வேதனைக்கு ஆளாகியுள்ளேன்.

இந்நேர்வில் அரசின் நிதியை சட்டத்திற்கு முரணாக சிறுகமணி பேரூராட்சி நிர்வாகத்தினரின் உடந்தையுடன், தற்போது 3-வது வார்டு கவுன்சிலர் அதிகார துஷ்பிரயோகம் செய்து, செயல் அலுவலர், பேரூராட்சியின் பொறியாளர் மற்றும் பணியாளர்கள் உடந்தையாக இருந்து அரசின் நிதியை முறைகேடாகவும், பொது சொத்திற்கு திட்ட அனுமதி இல்லாமல் அரசின் திட்ட ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கைக்கு மாறாக, வேலை செய்துள்ளனர். ஆனால் எனக்கு பொது தகவல் அலுவலரான சிறுகமணி பேரூராட்சியின் செயல் அலுவலர் உண்மைக்கு மாறாகவும், தான் செய்யவேண்டிய கடமை ஆற்றாமலும், ஆதாயம் பெறும் நோக்கத்தில் பொய்யான ஆவணம் தயார் செய்து பதில் அளித்துள்ளார் என்பது அவர் கொடுத்த தகவலில் தெரியவருகின்றது எனக்கு நிர்வாகத்தின் மீது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி திட்டத்தில் ஊழல் நடந்துள்ளது என்பது கீழ்கண்ட ஆவணத்தின்படி புலனாகின்றது.

மேற்படி நிர்வாகத்திற்குட்பட்ட சிறுகமணி கிழக்கு கிராமம் சர்வே எண்.221/3 உட்பிரிவு கொண்ட நிலத்தில் உள்ளாட்சி சட்டத்தின்படி உரிய வரன்முறையும், அங்கீகாரமுமின்றி வீட்டுமனையாக பிரித்து, அந்நிலத்தை விற்பனை செய்துள்ளனர். மேற்படி நிலத்தில் முறையாக அங்கீகாரம் பெறாமல் பல நபர்கள் வீடு கட்டியும் அவற்றில் சட்டத்திற்கு முரணாக குடியிருந்தும் வருகின்றனர். மேற்படி வீட்டிற்கு முனிசிபாலிட்டி சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்க நேரடியாகவும், மனுவாகவும் மனு அளித்தும் எந்தவித சட்ட விதிமுறையையும் பின்பற்றாமல் அரசிற்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளனர். மேற்படி சம்பவத்திற்கு தொடர்ச்சியாக மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், கடந்த 05.12.2022-ஆம் தேதியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவான

மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் பதிவு தபால் மூலம் மனு அளித்தேன். மேற்படி மனுவிற்கு சென்னை, லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு இயக்குநர் 26.12.2022 நாளிடப்பட்ட கடிதத்தில் தங்களை அணுகி தக்க பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி உத்தரவு வழங்கி உள்ளார். மேற்படி உத்தரவின்படி கீழ்க்கண்ட ஆவணத்தின்படி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், சிறுகமணி பேரூராட்சி அலுவலகத்தின் மூலம் Tender Notice : 30154104 ஒப்பந்தபுள்ளியில் அரசிடம் முன் அனுமதி பெறாமல் ஒத்தையடி பாதையில் பேவர் பிளாக் சாலை அமைத்து, அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டதற்கும், சிறுகமணி கிழக்கு சர்வே எண்.221/3ல் முனிசிபாலிட்டி சட்டவிதி முறைபடி உரிய அங்கீகாரமின்றி வீட்டுமனையாக பிரித்துள்ள இடத்தில் வீடு கட்டியவர்களின் மீது நடவடிக்கை எடுக்காமல் விடுத்து அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியதற்கும் மற்றும் சர்வே எண்.219/93 எண்ணில் நத்தம் காலி மனையில் முறையாக வீடு கட்டுவதற்கு அங்கீகாரம் பெறாமல் கட்டியுள்ள வீடுகளின் மீது நடவடிக்கை எடுக்காமல், அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய சிறுகமணி பேரூராட்சியின் செயல் அலுவலர், நிர்வாக பொறியாளர், ஒப்பந்தபுள்ளி எடுத்தவரின் உரிமம் மற்றும் 3-வது வார்டு கவுன்சிலரின் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேட்டிற்கு உடந்தையாக உள்ளவர்களை சட்டத்தின்படி துறைரீதியாக வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டி மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 24.01.2023 நாளிட்ட கடிதம் மற்றும் 15.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.03.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சியில் 2021-22ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மண் சாலைகளை தார் சாலை / பேவர் பிளாக் சாலைகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.11538/2021/பி4 நாள்:15.11.2021 செயல்முறை ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதின் பேரில் இளநிலை பொறியாளர், சிறுகமணி பேரூராட்சி தொகுப்பு அவர்களால் உரிய மதிப்பீடு தயார் செய்து, கண்காணிப்பு பொறியாளர், சென்னை அவர்களால் 17.11.2021 அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 06.12.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு. ஆர். ஏ. குழந்தைவேல், ஒப்பந்ததாரர் என்பவருக்கு 10.12.2021ம் தேதி பணி ஆணை வழங்கப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

| வ.எண். | பணியின் விபரம் | நீளம், கி.மீ. | மதிப்பீடு ரூ.இலட்சம் |
|---|---|---|---|
| 1. | சிப்பம் - 1<br>அண்ணாநகர் கிழக்கு விஸ்தரிப்பு வார்டு எண்.6, சிறுகமணி மயானபாதை, அய்யர் மயான பாதை, உப்பிலியர் தெரு, சிறுகமணி மெயின்ரோடு பள்ளிவாசல், வார்டு எண்.3, வள்ளுவர் நகர் மாரியம்மன் கோவில் எதிர்புறம், மாரியம்மன் கோவில் பின்புறம் வார்டு எண்.9, திருவள்ளுவர் தெரு, அய்யன் வாய்க்கால் கரை, திருவள்ளுவர் நகர் காந்தி பார்க் ரோடு, திருவள்ளுவர் நகர் மேற்கு சந்து 2,4, திருவள்ளுவர் நகர் 3வது கிராஸ், வார்டு எண்.9, ஸ்வீப்பர் காலனி, வார்டு எண்.14, மயானபாதை 1வது சந்து, 2வது சந்து, வார்டு எண்.15, பாலவிநாயகர் கோவில் தெரு, மலையப்ப நகர் மெயின்ரோடு தெற்கு தெரு ஆகிய பகுதிகளில் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 1.355 | 94.50 |
| 2. | சிப்பம்–2<br>வார்டு எண்.13, சங்கிலியாண்டபுரம் கிழக்கு குறுத்தெரு, வார்டு எண்.14, எஸ். புதுக்கோட்டை, கல்லுவாய்க்கால் ரோடு மற்றும் வார்டு எண்.10, ஆசாத் நகர் ஆகிய பகுதிகளில் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 0.416 | 38.50 |
| | கூடுதல் | | 133.00 |

மேற்படி பணியானது இரண்டு சிப்பங்களாக ரூ.94.50 இலட்சம் மற்றும் 38.50 இலட்சம், ஆக கூடுதல் ரூ.133.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் ஒத்தையடி பாதை (வார்டு எண்.3 திருவள்ளுவர் நகர் 4வது கிராஸ் மேற்கு சாலை) என குறிப்பிட்டுள்ள சாலையானது பேரூராட்சி அலுவலக சாலைப் பதிவேட்டின்படி 105.90 மீட்டர் நீளத்திற்கும் மற்றும் 5 மீட்டர் அகலத்திற்கும் மண்சாலையாக இருந்ததை தற்போது பேவர் பிளாக் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இச்சாலையில் பேரூராட்சிக்கு சொந்தமான நவீன சுகாதார வளாகம் ஒன்று உள்ளது மற்றும் 3 குடியிருப்புகளும் உள்ளன. மேலும், இச்சாலை வழியை பொதுமக்கள் பொது சுகாதார வளாகத்திற்கும் மற்றும் காவேரி ஆற்றிற்கும் செல்ல பயன்படுத்தி வருகின்றனர். மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி இப்பணியில் எந்தவித முரண்பாடுகளும் மற்றும் முறைகேடுகளும் ஏதும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இச்சாலை தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் திருச்சி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்கள் மேற்படி சாலையினை நேரடியாக ஆய்வு செய்துள்ளார்கள் என்ற விபரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.221/3 உட்பிரிவு கொண்ட நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மனைகள் நகர ஊரமைப்பு துறையின் உரிய தொழில் நுட்ப அனுமதி

பெறப்படாத, அங்கீகாரம் இல்லாத மனைகளாகும். உரிய அங்கீகாரமற்ற மனைகளுக்கு பேரூராட்சி வாயிலாக, அரசு விதிமுறைகளின்படி எவ்வித கட்டட அனுமதியும் வழங்க இயலாது என்பதையும், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் அனுமதியின்றி கட்டடம் கட்டியவர்களுக்கும், அரசு விதிமுறைகளின்படி கட்டட அனுமதி வழங்க இயலாது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எந்த ஊழல்களும் நிர்வாக சீர்கேடும் சிறுகமணி பேரூராட்சியில் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 27.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) 27.03.2023 அன்று மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி பேரூராட்சி 3வது வார்டில் அரசின் நிதியை முறைகேடாகவும் திட்ட அனுமதி இல்லாமலும், ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக இணையத்தில் வெளியிட்டுள்ள அறிக்கைக்கு மாறாக, ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறுகமணி பேரூராட்சி திருவள்ளுவர் நகரில் பொது சந்தும் மற்றும் அதன் வழிகளிலும், மாரியம்மன் கோவில் உள்ள இடத்திலும் பேவர் பிளாக் சாலை அமைத்திட ஒப்பந்தம் கோரி இணையத்தில் விபரங்களை வெளியிட்டுள்ளனர். சுமார் ரூ. 95 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பேவர் பிளாக் அமைக்கும் பணியை சட்டத்திற்கு புறம்பாக ஒத்தையடி பாதையிலும், பொதுமக்கள் குடியிருப்பு இல்லாத இடத்திலும் யாருக்கும் பயனில்லா இடத்தில் பேரூராட்சியினர் செய்துள்ளனர். இதனால், அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பேரூராட்சியில் முறையாக அங்கீகாரம் பெறாமல் பலர் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். இது தொடர்பாக பேரூராட்சியில் மனு அளித்தும் எனது மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவுக்கும் 26.12.2022 அன்று மனு அளித்துள்ளேன்.

எனவே சிறுகமணி பேரூராட்சியில் முன்னனுமதி பெறாமலும், யாரும் உபயோகப்படுத்தாத இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைத்தும், அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுத்திய, மேலும் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள வீடுகளின் மீது நடவடிக்கை எடுக்காத பேரூராட்சி அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுத்திடவும், சட்ட விதிகளை மீறி உரிய அங்கீகாரமின்றி மேற்கண்ட இடத்தில் வீடு கட்டியுள்ளவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்."

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்து, எனது 11.1.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) 27.03.2023 அன்று சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறை மன்ற நடுவத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சிறுகமணி தேர்வுநிலைப் பேரூராட்சியில் 2021–22 ஆம் ஆண்டு ரூ.94.50 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.2, 3, 4, 6, 9, 14 மற்றும் 15 வார்டுகளில் மொத்தம் 1.3 கிலோ மீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் சாலை அமைக்கவும் மற்றும் ரூ 38.5 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்கள்.10, 13 மற்றும் 14 வார்டுகளில் 0.4 கிலோ மீட்டர் நீளத்தில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 06.12.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான விலைப்புள்ளியை அளித்த ஒப்பந்தாரருக்கு 10.12.2021 ம் தேதி பணி ஆணை வழங்கப்பட்டு, பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இச்சாலைப் பணிகளை திருச்சி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் நேரடியாக ஆய்வு செய்துள்ளார். எனவே இச்சாலை அமைக்கும் பணியில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.221/3 உட்பிரிவு கொண்ட நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மனைகள் நகர ஊரமைப்பு துறையின் உரிய தொழில் நுட்ப அனுமதி பெறப்படாத, அங்கீகாரம் இல்லாத மனைகளாகும். உரிய அங்கீகாரமற்ற மனைகளுக்கு பேரூராட்சி வாயிலாக அரசு விதிமுறைகளின்படி எவ்வித கட்டட அனுமதியும் வழங்க இயலாது என்பதையும் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் அனுமதியின்றி கட்டடம் கட்டியவர்களுக்கும், அரசு விதிமுறைகளின்படி கட்டட அனுமதி வழங்க இயலாது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட வீடுகளுக்கு பட்டா இல்லை. எனினும் மேற்கண்ட வீடுகளுக்கு சொத்துவரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், எனது 24.03.2023 நாளிட்ட அறிக்கையையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறு இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(7) இதனைத் தொடர்ந்து சிறுகமணி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்காணும் கூடுதல் விளக்கம் சமர்ப்பித்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சியில் 2021–22–ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மண் சாலைகளை தார்சாலை/பேவர் பிளாக் சாலைகளாக மாற்றும் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை <u>https://tntenders.gov.in</u> மற்றும் https://www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்தபின் Tender IDயாக இரண்டு பணிகளுக்கு முறையே 214035 என்றும் 214058 என்றும் எண்ணிடப்பட்டு வரப்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வில் பொது மக்கள் பார்வையிடும் https://www.tenderdetail.com/Indian-Tenders என்ற இணைய தளத்தால் தேசிய அளவில் வெளியிடப்படும் அனைத்து பணிகளும் இணைய தளத்தால் எண்ணிடப்பட்டுள்ளது என்பதையும், அதன்படி சிறுகமணி பேரூராட்சியிலிருந்து பதிவேற்றம் செய்யப்பட்ட பணிகளை தேடுகையில்

30154104 என்ற இணையதளத்தால் எண்ணிடப்பட்ட ஆவணத்தில் உள்ள, சாலை அமைக்க சதுர அடி மதிப்பு குறித்த விபரம் கோரியதால், இப்பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை எனவும், இரண்டு சிப்பம் பணிகள் முறையே ரூ.94.50 இலட்சம், ரூ.38.50 இலட்சம் மதிப்பிலான பணிகளின் கூடுதல் ரூ.133.00 இலட்சம் மதிப்பீட்டில் KNMT திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் சாலை அமைக்கப்படுகிறது எனவும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுகமணி கிழக்கு சர்வே எண்.221/3ல் உள்ள நிலம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு ஆகும். அதில் 4 நபர்கள் அனுமதியின்றி வீடு கட்டி உள்ளனர். அவ்வாறு அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு உரிய மனை அங்கீகாரம் பெறுவதற்கும், அதன் பின் கட்டிட அனுமதி பெறுவதற்கும் 28.03.2023ம் தேதியில் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. அதற்கான அறிவிப்பு நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் 219/93ல் உள்ள இடம் நத்தம் அரசு புறம்போக்கு நிலமாகும். மேற்படி இடத்தில், அரசு ஆட்சேபனை இல்லாத பட்சத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை எண்.1 ந.க.எண்.1469/2023/இ5 நாள்:06.02.2023ன்படி அடிமனை நீங்கலாக மேற்கூரைக்கு மட்டும் வரிவிதிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மேற்படி சர்வே எண்ணில் உள்ள கட்டிடங்களுக்கு 31.03.2023ம் தேதிக்குள் வரிவிதிப்பு செய்வதற்கு மன்ற கூட்டத்தில் பொருள் வைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(8) முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

12 (d) Order other necessary remedial measures considering the facts and circumstances of the case. அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணியைச் சேர்ந்த மனுதாரர் திரு. T.P. பாலசுப்பரமணியன் என்பவர் தனது 11.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் சிறுகமணி பேரூராட்சிக்குட்பட்ட சாலைகளில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்க ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டினைவிட கூடுதல் மதிப்பீட்டிலும், அரசின் அனுமதியின்றியும் முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்கின்றனர் எனவும், வார்டு எண்.3ல் மக்களுக்கு பயனில்லாத இடத்தில் பேவர் பிளாக் சாலை அமைப்பதாகவும் இதனால் அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட, சிறுகமணியில் சர்வே எண்.221/3ல் பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றி சிலர் வீடுகள் கட்டியுள்ளனர் எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

2021-22-ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தும் வகையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால், அரசாணை (நிலை) எண்.92, நாள்:30.10.2021ல், பிறவற்றுள், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் வார்டு எண்.3 (வள்ளுவர் நகர் மாரியம்மன் கோவில்) உட்பட மொத்தம் 20 மண் சாலைகளில் மொத்தம் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 1.3 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகள் (Paver Block Roads) அமைக்கவும் மற்றும் 3 சாலைகளுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கவும் என ஆக மொத்தம் ரூ.98 இலட்சத்திற்கு நிர்வாக ஆணை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் , பேரூராட்சிகளின் ஆணையர், ந.க.எண்.11538/2021/அ4, 15.11.2021 நாளிடப்பட்ட கடிதத்தில், இத்திட்டப்பணிகளில் ஏதேனும் மாற்றம் தேவைப்படுமெனில், ஆணையரின் கவனத்திற்கு கொண்டு வரப்படவேண்டும் என அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக, பேவர் பிளாக் சாலைகள் அமைக்க பேரூராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்டு, சென்னை, கண்காணிப்பு பொறியாளரால் 17.11.2021 அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், மேற்படி பணிகளை இரண்டு சிப்பங்களாக ரூ.94.50 இலட்சம் மற்றும் ரூ.38.50 இலட்சம் என ஆக மொத்தம் ரூ.133 இலட்சம் மதிப்பீட்டிற்கு கூடுதல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தித்தாள் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு 10.12.2021 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.221/3 உட்பிரிவு கொண்ட நிலத்தில் அமைந்துள்ள மனைகள் நகர ஊரமைப்புத் துறையின் அங்கீகாரம் இல்லாத மனைகள் என்றும் இம்மனைகளில் கட்டிய 4 கட்டடங்களுக்கு அரசு விதிகளின்படி பேரூராட்சியால் எவ்வித கட்டட அனுமதியும் வழங்க இயலாது எனவும், மேற்கண்ட பட்டா இல்லாத வீடுகளுக்கு சொத்துவரி விதிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது. மேலும் சர்வே எண்.219/93ல் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில் உள்ள கட்டடங்களுக்கு அரசு ஆட்சேபனை இல்லாத பட்சத்தில், சொத்து வரியினை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை செயல் அலுவலரின் அறிக்கையின் மூலம் அறியமுடிகிறது.

இது தொடர்பாக, அனைத்து மண்டலங்களிலும் உள்ள பேரூராட்சிகளுக்குட்பட்ட (i) வரி விதிக்கப்படாத (unassessed) மற்றும் குறைவாக வரிவிதிக்கப்பட்ட (under assessed) கட்டடங்களுக்கு வரிவிதிப்பது தொடர்பாக பேரூராட்சிகளின் இயக்குநரின் ந.க.எண்.1459/2023/இ5 நாள்:06.2.2023 சுற்றறிக்கையில் கூடுதல் வழிகாட்டுதல்கள் வழங்கி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி, வரி விதிப்புக்குட்படாமல் உள்ளதாக கண்டறியப்பட்ட கட்டடங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 117-அன்படி வரி விதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மேற்காணும் கட்டடங்கள் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் என்பதால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1972, பிரிவு 56 மற்றும் 57-ன் கீழும் உரிய அறிவிப்புகள் வழங்கி, மூடி முத்திரையிடுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.221/3 மற்றும் சர்வே எண்.219/93 கொண்ட நிலத்தில் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு, பேரூராட்சிகளின் இயக்குநரின் 06.02.2023 நாளிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு சிறுகமணி தேர்வுநிலை

பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஏப்ரல் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. T.P. பாலசுப்பரமணியன்,
த/பெ. பெரியசாமி,
திருவள்ளுவர் நகர்,
சிறுகமணி அஞ்சல்,
திருவரங்கம் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
சிறுகமணி தேர்வுநிலை பேரூராட்சி.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்
நகர் நிர்வாக அலுவலகம் / ஆணையாளர்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.